வழக்கில் ஈடுபடுகிற காலத்தைக் குறைப்பதற்கு, அப்பெலட் ஸ்டேஜ் என்று சொல்வார்கள் அதைக் குறைக்க வழிவகை செய்யப்படுமா? குறிப்பிட்ட காலத்திற்குள் தீர்ப்பை அமல் படுத்தாதவர்கள்மீது ப்ராஸிக்யூஷன் நடவடிக்கை போன்றவை எடுத்துக் கொள்ளப்படுமா?

மாண்புமிகு திரு. கே. இராஜா முகமது: கைத்தறியில் நெய்ய வேண்டிய ரகங்கள் என்று ஒதுக்கீடுமுறையில், சில ஒதுக்கிவைத்திருக்கிறோம். அதை விசைத்தறிகளில் செய்கிறபோதுதான் பிரச்னை வருகிறது. அப்படி விசைத்தறிகளில் செய்கிறபோது அந்த விசைத்தறிகளை ஓட்டக்கூடாது என்றோ அல்லது அதற்கு மின் இணைப்பு கொடுக்கக்கூடாது என்றோ சட்டத்தில் இடமில்லை. ஒதுக்கப்பட்ட ரகங்களை மீறி விசைத்தறிகளில் தயாரித்தால் அந்த ரகங்களை மட்டும் பறிமுதல் செய்து வழக்குபோடுகிறோம். மீண்டும் அப்படிச் செய்தால் பறிமுதல் செய்து வழக்குபோடுகிறோம். இது தொடர்ந்து நடைபெறுகிறது, ஒரு குடைராட்டினத்தில் பயணம் செய்வது போலிருக்கிறது. மத்திய அரசினிடம் கைத்தறிக்கு சில ரகங்களை ஒதுக்கி மேலும் தீவிரமான நடவடிக்கை எடுக்க வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டிருக்கிறோம். அதற்கான பதில் கிடைத்த பிறகு மேலும் துரிதமாக, விரைவான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

(முற்பகல் 10-00)

2. தகவல் கோரல்.

(அ) அலுவலகங்கள் மூடியிருப்பதால் உறுப்பினர்கள் சம்பளம் வாங்கமுடியாதது குறித்து.

திரு. இரெ. இராசமாணிக்கம் : தலைவர் அவர்களே, இன்றைக்கு 14-ம் தேதி ஆகிறது. இன்னும் என் போன்றவர்கள் சம்பளம் வாங்க முடியவில்லை. எல்லா அலுவலகங்களும் மூடிக் கிடக்கின்றன. இதையெல்லாம் . . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதைப்பற்றி நீங்கள் திடீரென்று எழுந்து கேட்க முடியாது, தயவு செய்து உட்காருங்கள்.